DC 4/9/22

மருத்துவம்–மக்கள் நல்வாழ்வுத் துறை
அஞ்சல் பிரிவு
13 SEP 2022

**சுருக்கம்**

தமிழ்நாடு மருத்துவ அடிப்படை பணிகள் – தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவக் கல்லூரிகள், மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் கடைநிலை ஊழியர்களுக்கு (D Group) – சுழற்சி முறையில் பணி நேரம் நிர்ணயித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மருத்துவம் – மக்கள் நல்வாழ்வு( சி1)த்துறை**

அரசாணை (நிலை) எண்.275

நாள். 01.09.2022
திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது, ஆனி–16

E-3148507
13/09/2022

படிக்கப்பட்டது

1. 06.12.2019 நாளிட்ட சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிப்பேராணை எண். 23234/2015–ல் வழுங்கப்பட்ட தீர்ப்புரை.
2. 13.07.2022 நாளிட்ட மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண். 51984/நி5(1)/1/2014

*****

ஆணை:

தமிழ்நாடு அரசு மருத்துவத் துறை அனைத்து ஊழியர் மற்றும் சுகாதாரப் பணியாளர் சங்கம், மதுரை, மருத்துவத் துறையில் பணியாற்றும் அடித்தளப் பணியாளர்களின் (D Grade Employees) பணி நேரத்தினை 8 மணி நேரமாக நிர்ணயம் செய்து ஆணையிடக் கோரி, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நீதிப்பேராணை எண். 23234/2015 –ல் வழக்கு தொடுத்தது.

2. மேற்சொன்ன வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை மேலே பார்வை 1–ல் படிக்கப்பட்ட தனது தீர்ப்புரையில் கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பித்துள்ளது:–

*"In view of the Section 9 of the Tamil Nadu Shops and Establishments Act, 1947 and the decision of the Delhi High Court in Delhi Fire Service Karamchari V. Municipal Corporation of Delhi reported in 60(1995) DLT 482 and also recording the above statement made in the counter affidavit, the impugned order in Letter No.13815/C1/2015–1, dated 26.06.2015 on the file of the 1st respondent is quashed. Accordingly, the writ petition is allowed. No costs.*

3. பார்வை 1–ல் படிக்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டது.

4. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மேலே இரண்டில் படிக்கப்பட்ட தனது கருத்துருவில்;

"காலை 6 மணி முதல் மதியம் 2 மணி வரை (1st shift)
மதியம் 1 மணி முதல் இரவு 9 மணி வரை (2nd shift)
மற்றும்
இரவு 8 மணி முதல் காலை 6 மணி வரை (3rd shift)

என்கிற முறையில் சுழற்சி பணியாக (shift system) வழங்கலாம் என்றும், பணியில் உள்ள கடைநிலை ஊழியர்களான செவிலிய உதவியாளர் தரம்–II, மருத்துவமனை பணியாளர் மற்றும் துப்புரவுப் பணியாளர்களில் (D group) 50 சதவீதம் பேர் முதல் சுழற்சியிலும், 25 சதவீதம் பேர் இரண்டாம் சுழற்சியிலும் மற்றும் 25 சதவீதம் பேர் மூன்றாம் சுழற்சியிலும் பணியமர்த்தலாம்" என தெரிவித்துள்ளார்.

5. இக்கோப்பினை உரிய ஆவணங்களுடன் அரசு பரிசீலனை செய்தது. பார்வை 1–ல் படிக்கப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் தீர்ப்பின் அடிப்படையில், மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத்துறையின் கீழ்வரும் அரசு மருத்துவக் கல்லூரிகள், மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் கடைநிலை ஊழியர்களுக்கு (D Grade Employees) கீழ்க்காணுமாறு பணி நேரம் நிர்ணயித்து ஆணை வெளியிட உத்தேசித்து, அவ்வாறே ஆணையிடுகிறது:–

காலை 6 மணி முதல் மதியம் 2 மணி வரை (1st shift)
மதியம் 1 மணி முதல் இரவு 9 மணி வரை (2nd shift)
மற்றும்
இரவு 8 மணி முதல் காலை 6 மணி வரை (3rd shift)

என்கிற முறையில் சுழற்சி பணியாக (shift system) வழங்கவும், மேலும் பணியில் உள்ள கடைநிலை ஊழியர்களான செவிலிய உதவியாளர் தரம்–II, மருத்துவமனைப் பணியாளர் மற்றும் துப்புரவுப் பணியாளர்களில் (D Grade Employees) 50 சதவீதம் பேர் முதல் சுழற்சியிலும், 25 சதவீதம் பேர் இரண்டாம் சுழற்சியிலும் மற்றும் 25 சதவீதம் பேர் மூன்றாம் சுழற்சியிலும் பணியமர்த்தப்படுவார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ப. செந்தில்குமார்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்:
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர், சென்னை–600 006.
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை–600 010
பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, இயக்குநர்,
சென்னை–600 006.
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர், (தொஅஈ)சென்னை–600 006
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை இயக்குநர், சென்னை–600 106.

**நகல்:**
மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின்
நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
மருத்துவம் – மக்கள் நல்வாழ்வு (அனைத்து அலுவலர்கள் / பிரிவுகள்) துறை,
சென்னை– 600 009.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

6/9/22

**பிரிவு அலுவலர்.**

6/9/22